**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.383/17**
**வழக்கு சாட்சி – அ.சா.4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜோதியம்மாள் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | முருகன் | தொழில் | கூலி |
| கிராமம் | ராமநாதபுரம் | சமயம் | |
| தாலுக்கா | <u>உசிலம்பட்டி</u> | வயது | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.01.24

**( 1, 2 எதிரிகள் ஆஜர். 3, 4 எதிரிகள் ஆஜர் இல்லை. 3, 4 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் ராமநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். எதிரிகளை தெரியும். எனது அண்ணன் பெயர் அம்மாவாசை. அவர் எதிரிகளை எங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். ஆண்டிபட்டியை சேர்ந்த விக்டர்ராஜா எதிரிகளிடம் எங்களை அறிமுகம் செய்து வைத்து இராணுவத்தில் என் மகன் அலெக்பாண்டியனுக்கு வேலை வாங்கி தருவதாகவும் அதற்கு ரூ2 லட்சம் கொடுங்கள் என்று கூறினார்கள். நான் ரூ2 லட்சம் பணத்தை ஆண்டிபட்டி பேருந்து நிலையத்திற்கு அருகில் ஆஜர் எதிரிகள் இருவரிடடும் கொடுத்தேன். அதன்பின்னர் 6 மாதமாகியும் வேலை எதுவும் என் மகனுக்கு எதிரிகள் வாங்கி தரவில்லை. நான் ஆஜர் எதிரிகள் இருவரிடமும் வேலை இல்லை என்றால் பரவாயில்லை பணத்தை மட்டும் கொடுங்கள் என்று கேட்டேன். எதிரிகள் பணத்தை கொடுக்கவில்லை. பணத்தை கொடுப்பதாக கூறி காலம் கடத்தி வந்தார்கள். அது சம்மந்தமாக காவல்நிலையம் புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யபடவில்லை.